# Similac

# ஃபார்முலா தயாரிப்புக்கான வழிமுறைகள்

உங்கள் குழந்தையின் ஆரோக்கியம், இந்த வழிமுறைகளை கவனமாகப் பின்பற்றுவதைப் பொறுத்தது. சோப் மற்றும் தண்ணீரால் கைகளை நன்றாகக் கழுவவும். பச்சிளங் குழந்தைகளுக்கான ஃபார்முலாவைப் பயன்படுத்தும்போது சரியான சுகாதாரம், தயாரிப்பு. கலவை, சேமிப்பு ஆகியவை மிகவும் முக்கியம். உங்கள் குழந்தைநல மருத்துவரின் ஆலோசனைப்படி உபயோகிக்கவும்.




**எச்சரிக்கை:**
ஒருபோதும் மைக்ரோவேவ் அடுப்பில் ஃபார்முலாவை சூடாக்காதீர்கள்; அது தீவிர தீக்காயங்களை ஏற்படுத்த வாய்ப்புள்ளது. குழந்தைகளுக்கு வாயில் சுடுகாயம் ஏற்படுவதை தவிர்க்க, ஊட்டுவதற்குமுன் உஷ்ணத்தைச் சோதிக்கவும்,

## பவுடர்


பவுடர் பச்சிளங்குழந்தை ஃபார்முலாக்கள் தொற்று நீக்கப்பட்டவை அல்ல உங்கள் குழந்தைநல மருத்துவர் பரிந்துரை செய்யாவிடின், பருவமுறா குழந்தைகளுக்கு, பிறப்பு எடை குறைவான அல்லது நோய் எதிர்ப்புப் பிரச்சினைகள் உள்ள குழந்தைகளுக்கு ஊட்டப்படக்கூடாது.

### நீர் சேருங்கள்

1. கழுவிய பாட்டில்கள், நிப்பிள்கள், ரிங்குகள், மூடிகள் மற்றும் தயாரிப்பில் பயன்படுத்தப்படும் அனைத்து உபகரணங்களையும் கொதிக்கும் நீரில் போட்டு, 2 நிமிடங்களுக்கு மற்றொரு பாத்திரத்தில் நீரை 2 நிமிடங்கள் கொதிக்க வைக்கவும். கலக்கும் முன் அறை வெப்ப நிலைக்குக் குளிர்விக்கவும்.



2. கொதிக்கவைத்து, குளிர்விக்கப்பட்ட நீரைத் தேவையான அளவு பாட்டிலுக்குள் ஊற்றவும்.



3. இணைப்பாக கொடுக்கப்பட்ட கரண்டியால், ஒவ்வொரு 60 மிலி தண்ணீருக்கும் ஒரு கரண்டி பவுடரை சேர்க்கவும். உலர்வான கரண்டியை பாட்டிலுக்குள் மீண்டும் வைக்கவும்



கலக்கும் முறை வழிகாட்டி

| தண்ணீர் | கரண்டி(கள்)‡ |
|---|---|
| 60 மில்லி | 1 |
| 120 மில்லி | 2 |
| 180 மில்லி | 3 |
| 240 மில்லி | 4 |

4. பாட்டிலை மூடவும்; நன்றாக குலுக்கவும்; நிப்பளை இணைக்கவும்




ஒரு முறை கலந்தவுடன், அதை உடனடியாக குளிர்சாதனப் பெட்டிக்குள் வைத்து, 24 மணி நேரத்திற்குள் பயன்படுத்த வேண்டும், ஊட்ட ஆரம்பித்த 1 மணி நேரத்திற்குள் பயன்படுத்துங்கள் அல்லது கொட்டிவிடுங்கள்.

## செறிவானது

(கொதிக்கவைத்து, அறையின் வெப்பநிலைக்குக் குளிர்விக்கப்பட்ட) நீர் மற்றும் செறிவூட்டிய திரவ ஃபார்முலாவை சமமான அளவில் சேர்க்க வேண்டும்.

### நீர் சேருங்கள்

1. கழுவிய பாட்டில்கள், நிப்பிள்கள், ரிங்குகள், மூடிகள் மற்றும் தயாரிப்பில் பயன்படுத்தப்படும் அனைத்து உபகரணங்களையும் கொதிக்கும் நீரில் போட்டு, 2 நிமிடங்களுக்கு கொதிக்க வைக்கவும். மற்றொரு பாத்திரத்தில் நீரை 2 நிமிடங்கள் கொதிக்க வைக்கவும். கலக்கும் முன் அறை வெப்ப நிலைக்குக் குளிர்விக்கவும்.




2. கேனின் மேல்பகுதியை சுத்தம் செய்யவும். திறப்பதற்கு முன் நன்றாக குலுக்கவும். செறிவூட்டப்பட்ட ஃபார்முலாவையும், கொதிக்க வைத்து குளிர்விக்கப்பட்ட நீரையும் பாட்டிலுக்குள் சம அளவில் ஊற்றவும்




கலக்கும் முறை வழிகாட்டி

| கொதிக்கவைத்து, குளிர்விக்கப்பட்ட நீர் | + | செறிவூட்டிய திரவம் | = | ஊட்டும் அளவு |
|---|---|---|---|---|
| 30 மில்லி | | 30 மில்லி | | 60 மில்லி |
| 60 மில்லி | | 60 மில்லி | | 120 மில்லி |
| 90 மில்லி | | 90 மில்லி | | 180 மில்லி |
| 120 மில்லி | | 120 மில்லி | | 240 மில்லி |

3. பாட்டிலை மூடவும்; நன்றாக குலுக்கவும்; நிப்பளை இணைக்கவும்.



தயாரித்த பாட்டில்கள் மற்றும் திறந்த கேன்களை உடனே மூடவும், அதை உடனடியாக குளிர்சாதனப் பெட்டிக்குள் வைக்க வேண்டும். 48 மணி நேரத்திற்குள் பயன்படுத்த வேண்டும், ஊட்ட ஆரம்பித்த 1 மணி நேரத்திற்குள் பயன்படுத்துங்கள் அல்லது கொட்டிவிடுங்கள்.


## பயன்படுத்தத் தயாரானது

நீர் சேர்க்காதீர்கள்


### நீர் சேர்க்காதீர்கள்

**ப்ளாஸ்டிக் பாட்டில்கள் (59மிலி மற்றும் 235 மிலி):**


1. கழுவிய நிப்பிள், ரிங், மூடி ஆகியவற்றை கொதிக்கும் நீரில் போட்டு, 2 நிமிடங்களுக்கு கொதிக்க வைக்கவும்.



2. திறப்பதற்கு முன் பாட்டிலை நன்றாக **குலுக்கி**, மூடியை திருகி திறக்கவும்.




3. நிப்பிளை இணைக்கவும்




**கேன்கள்:**

1. பாட்டில்கள், நிப்பில்கள், ரிங்குகள், மூடிகள் மற்றும் தயாரிப்பில் பயன்படுத்தப்படும் அனைத்து உபகரணங்களையும் கொதிக்கும் நீரில் போட்டு, இரண்டு நிமிடங்களுக்கு கொதிக்க வைக்கவும்.



2. கேனின் மேல்பகுதியை சுத்தம் செய்யவும். திறப்பதற்கு முன் நன்றாக குலுக்கவும். ஃபார்முலாவை பாட்டிலில் ஊற்றி, நிப்பிளை இணைக்கவும்.



தயாரித்த பாட்டில்கள் மற்றும் திறந்த கேன்களை உடனே மூடவும், அதை உடனடியாக குளிர்சாதனப் பெட்டிக்குள் வைத்து, 48 மணி நேரத்திற்குள் பயன்படுத்த வேண்டும். ஊட்ட ஆரம்பித்த 1 மணி நேரத்திற்குள் பயன்படுத்துங்கள் அல்லது கொட்டிவிடுங்கள்.

TAMIL / TAMOUL

முழுமையான தயாரிப்பு வழிமுறைகளுக்கு அட்டவணையை பார்க்கவும்

மேலும் விவரங்களுக்கு, தயவு செய்து similac.caவுக்கு விஜயம் செய்யுங்கள், அல்லது **1-855-370-7878** **Similac® Feeding Expert** -ன் தொலைபேசி எண்ணில் எங்களுடன் தொடர்பு கொள்ளவும்.
தயாரிப்பு வழிமுறைகள் 14 வேறுபட்ட மொழிகளில் கிடைக்கப்பெறுகின்றன.

© Abbott Laboratories Co.
கனடாவில் அச்சிடப்பட்டது
HFSB358Z – December 2020 - 01309

Abbott